www.tamilarangam.net

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

# காத்திருந்த விமானமும் தலைமறைவான தலைவர்களும்



## உள் பிரச்சனைகள்

ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தில் 1985ம் ஆண்டின் மத்தியில் உள் இயக்கப் பிரச்சனைகள் தோன்ற ஆரம்பித்தன.

1982ம் ஆண்டும் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்திற்குள் உள்பிரச்சினை ஏற்பட்டது.

1982இல் ஈ.பி.ஆர்.எல்.எஃப் இயக்கத்தின் கொள்கைகளும், மக்கள் மத்தியிலான வேலைகளும் யாழ்-பிராந்திய கமிட்டியில் இருந்த உறுப்பினர்களால் தான் முக்கியமாக முன்னெடுக்கப்பட்டன.

இயக்கத்தின் மத்திய குழு தலைமை என்றளவில் இருந்ததே தவிர, ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தை தனித்துவமாக அடையாளப்படுத்திய அரசியல் பிரச்சார வேலைகளுக்கு வழிகாட்ட அதனால் முடியவில்லை.

இதனால் மத்திய குழுவை கடுமையாக விமர்சித்த யாழ்-பிராந்தியக் கமிட்டி தனித்து இயங்குவதற்குத் தீர்மானித்தது.

மட்டக்களப்பு பிராந்தியக் கமிட்டி, வன்னிப் பிராந்தியக் கமிட்டி என்பவற்றின் ஆதரேவாடு ஒரு தீர்மானத்தையும் எடுத்தது.

அப்போது இயக்கத்தின் உள்

**52**

**அரசியல் தொடர்**
**அற்புதன் எழுதுவது**

இயக்கத் தொடர்பாளராக இருந்தவர் குணசேகரன். அவரது முயற்சியின் காரணமாக 1982 இல் ஏற்படவிருந்த பிளவு தடுக்கப்பட்டது.

அதனையடுத்து ஏற்பட்ட உள் பிரச்சனை 1985இன் மத்தியில்தான் தீவிரமடைந்தது.

ஈழப் போராளி அமைப்புக்களுக்குள் இரண்டாம் கட்ட தலைமைத்துவம் ஈ.பி.ஆர்.எல்.எஃப் அமைப்பில்தான் பலமானதாக இருந்தது.

அது மட்டுமல்லாமல் கட்சிக்குள் கருத்து மோதல்களை துணிச்சலாக நடத்தக்கூடியளவுக்கு உட்கட்சி ஜனநாயகமும் ஈபி.ஆர்.எல்.எஃப். அமைப்புக்குள் தான் 1986 வரை உயிரோட்டமுள்ளதாகவும் இருந்தது.

இரண்டாம் கட்டத் தலைமையே இயக்க நடவடிக்கைகளுக்கு உண்மையான தலைமைப்பாத்திரம் வகித்தமையால் தலைமைக்கு தன்னிச்சையான போக்குகளை மேற்கொள்ள முடியாமல் இருந்தது.

இந்தியாவிலும், இலங்கையிலும் இயக்கத்தின் அரசியல்-பிரசார நிறுவனங்களும், கட்சியின் மக்கள் அமைப்புக்களும் இரண்டாம்கட்ட தலைமையின் கையில் இருந்ததும் ஒரு முக்கிய அம்சமாகும்.

இந்திய அரசுடனான தொடர்பு, இந்திய புலனாய்வு அமைப்புக்களுடனான தொடர்பு என்பவற்றை பத்மநாபா தனது கையில் வைத்துக் கொண்டார்.

## தலைமையில் பிளவு

1983க்குப் பின்னர் இயக்கத்தின் ஆட்பலம் பெருகிய நிலையில் ஏற்பட்ட புதிய சூழலுக்கு தலைமையால் ஈடு கொடுக்க முடியவில்லை.

ஆட்பலம் பெருகியதோடு தலைமை திருப்திப்பட்டுக் கொண்டதே தவிர, இயக்கத்தை புரட்சிகர கட்சியாக மாற்றும் செயல்பாட்டுக்கு தலைமை வழங்க முடியாமல் இருக்கிறது.

மத்திய குழுவில் உள்ள சில உறுப்பினர்கள் தலைமைத்துவத்திற்குரிய திறமையை வெளிப்படுத்த முடியாதவர்களாக இருக்கின்றனர் என்றெல்லாம் இயக்கத்தின் இரண்டாம் கட்டத் தலைமை விமர்சனங்களை முன்வைத்தது.

மத்திய குழுவின் உறுப்பினராகவும், மக்கள் விடுதலைப் படையின் பிரதம தளபதியாகவும் இருந்த டக்ளஸ் தேவானந்தா, மத்திய குழு உறுப்பினர் செழியன் ஆகியோர் இரண்டாம் கட்டத் தலைமையின் பக்கம் நின்றனர்.

அதனால், இயக்கத்தின் இராணுவ அமைப்பும் தலைமையின் விருப்பத்திற்கு ஏற்ப செயற்படும் என்ற நிலை இல்லாமல் போய்க்கொண்டிருந்தது.

"மத்திய குழுவைக் கூட்டி நிலமையை ஆராயலாம்" என்றார் பத்மநாபா.

"மத்திய குழுக் கூட்டத்தை தமிழ்நாட்டில் வைத்துக்கொண்டால் வரமுடியாது. மத்திய குழு உறுப்பினர்கள் ஈழத்திற்கு வரவேண்டும். இங்கு கூட்டத்தை நடத்தலாம். கலந்துகொள்கிறேன்" என்று சொல்லிவிட்டார் டக்ளஸ் தேவானந்தா.

இதற்கிடையே ஈ.பி.ஆர்.எல்.எஃப் இந்திய பிராந்தியக் கமிட்டி தலைமைக்கு எதிரான விமர்சனங்களை ஒன்றுதிரட்டி உட்கட்சிப் போராட்ட ஆவணமாகத் தயாரிக்கத் தொடங்கியது.

இந்தியாவில் ஈ.பி.ஆர்.எல்.எஃப் வேலைகளுக்கு பொறுப்பாக இருந்தவர்களில் சகலருமே தலைமைக்கு எதிராக விமர்சனங்களை முன்வைத்தனர்.

ஈழச் செய்தி தொடர்பு நிலைய பொறுப்பாளர் மித்திரன், இந்திய பிராந்திய நிதிப் பொறுப்பாளர் பிரேம், இந்திய பயிற்சி முகாம்களுக்கான பொறுப்பாளர் தயாபரன், இந்திய பிராந்தியக் கமிட்டிச் செயலாளர் டேவிற்சன், ஈ.பி.ஆர்.எல்.எஃப் உளவுப் பிரிவின் தலைமைக் குழுவைச் சேர்ந்தவரும், பிரசார வெளியீடுகளுக்கு பொறுப்பாக இருந்தவருமான ரமேஷ், புதுடில்லியில் கட்சி வேலைகளுக்கு பொறுப்பாக இருந்த மகேஷ், கட்சியின் ஆங்கிலப் பத்திரிகையான 'ஸ்போக்ஸ் மன்' ஆசிரியர் மனோராஜசிங்கம் ஆகியோர் ஒரே குரலில் விமர்சனங்களை முன்வைத்தனர்.

## மைக்கேல் எங்கே?

இதே காலகட்டத்தில் ஈரோஸ் அமைப்புக்குள்ளும் உட்கட்சிப் பிரச்சினைகள் தோன்றத் தொடங்கியிருந்தன.

உட்கட்சிப் பிரச்சினையில் முன்னின்றவர்களில் ஒருவர் மைக்கேல். யாழ்ப்பாணம் நாவாந்துறையைச் சேர்ந்தவர். அவர் திடீரென்று காணாமல் போனார். மைக்கேல் எங்கே என்று கேட்டால் தமிழ்நாட்டிலிருந்த ஈரோஸ இயக்கத்தினர் மைக்கேல் ஈழத்திற்கு போய்விட்டார் என்றனர். இங்கு கேட்டால் தமிழ்நாட்டில் இருப்பதாகக் கூறினார்கள். மைக்கேல் உட்பட வேறு சிலரும் காதும் காதும் வைத்ததுபோல மண்டையில் போடப்பட்டுவிட்டார்கள் என்று நம்பப்பட்டது.

ஈரோஸ் இயக்கத் தலைமையின் இந்திய அரசுக்கு ஆதாரமான போக்குத் தொடர்பாகவும் உள்ளே பிரச்சனைகள் ஏற்படத் தொடங்கின.

இயக்கங்களின் உள்பிரச்சனைகள் குறித்து இத்தோடு தற்காலிகமாக நிறுத்திக் கொண்டு மேலே தொடருவோம்.

## முஸ்லிம்களின் நிலைப்பாடு

திம்புப் பேச்சுவார்த்தையில் ஒரு உடன்பாடு காணமுடியாமல் போனதற்கு இரண்டு காரணங்களே முக்கியமாக கூறப்பட்டன.

அரச படைகளின் போர்நிறுத்த மீறல்கள், வடக்கு-கிழக்கு இணைந்திருப்பதையோ, வடக்கு-கிழக்கு தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசம் என்பதையோ அரசாங்கம் ஏற்க மறுத்தமை என்பவையே முக்கியமான காரணமாக கூறப்பட்டது.

இதற்கு தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி சொன்ன பதில் புத்திசாலித்தனமானது.

"வடக்கு-கிழக்கு இணைந்திருக்கக்கூடாது என்று அரசாங்கம் சொல்வது முஸ்லிம் மக்களுக்காகத்தான். அவர்களை அநாதரவாக்கிவிட முடியுமா? நாம் ஒரு பொறுப்பான அரசாங்கம் அல்லவா?" என்று தேனொழுகப் பேசினார் அத்துலத் முதலி.

லலித் அத்துலத் முதலி சொன்னதிலிருந்து ஒரு பகுதி இது:

"வடக்கு-கிழக்கு மாகாணங்களை இணைப்பது என்பது சாத்தியமானதல்ல. இலங்கை மட்டுமல்ல சர்வேதச நாடுகளும் அதனை ஆதரிக்கவில்லை.

கிழக்கில் வாழும் 33 வீதமான முஸ்லிம் மக்களை நாம் அநாதரவாக்கிவிடமுடியாது. எந்த இனமும் இந்த நாட்டில் பாதிக்கப்படாத வகையிலான அரசியல் தீர்வையே நாம் முன்வைப்போம்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அபாயகரமான திட்டம் ஒன்றினை மேற்கொண்டு வருவதாக எமக்கு தகவல் கிடைத்துள்ளது. வவுனியா, திருக்கோணமலை போன்ற பகுதிகளிலுள்ள முஸ்லிம் கிராமங்களில் தாக்குதல்களை மேற்கொள்ள அவர்கள் உத்தேசித்திருப்பதாக தெரிய வருகிறது."

என்று கூறியிருந்தார் அத்துலத் முதலி. உண்மையில் அவ்வாறான ஒரு திட்டம் புலிகளிடம் அப்போது இருக்கவில்லை.

வடக்கு-கிழக்கு இணைப்புக்கு உள்ள தடையாக முஸ்லிம் மக்களை கொண்டுவந்து நிறுத்துவதே லலித்தின் திட்டமாக இருந்தது.

இதே லலித் அத்துலத் முதலிதான் இஸ்ரேலிய மொசாட் உளவுப் பிரிவினரை இலங்கைக்குள் கொண்டுவரக் காரணமாயிருந்தவர் என்பதும் மறக்க முடியாதது.

## முஸ்லிம் தூதுக்குழு

"இனப்பிரச்சனைக்கான அரசியல் தீர்வில் முஸ்லிம் மக்களின் அபிலாசைகளுக்கும் இடமளிக்கப்பட வேண்டும். தமிழ் அமைப்புக்களின் தலைவர்களைச் சந்தித்து எமது நிலைப்பாட்டை எடுத்துக் கூறப்போகிறோம்" என்று அறிவித்தார் அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூத்.

சென்னையில் இருந்த தமிழ் அமைப்புத் தலைவர்களைச் சந்திக்க பதியுதீன் மஹ்மூத் தலைமையில் ஆறுபேரடங்கிய குழு ஒன்று புறப்பட்டுச் சென்றது.

"வடக்கு-கிழக்கு இணைப்பை ஏற்றுக் கொள்வது சாத்தியமில்லை. மாகாண சுயாட்சி ஏற்படுவதையே நாம் விரும்புகிறோம். அரசாங்கம் மாவட்ட சபை யோசனைகளை முன்வைத்தால் ஏற்கமாட்டோம்" என்று பதியுதீன் மஹ்மூத் தெரிவித்தார். சிறீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியில் கல்வியமைச்சராக இருந்தவர் பதியுதீன் மஹ்மூத்.

புலிகள் இயக்கமும், ஈ.பி.ஆர்.எல்.எஃப், ரெலோ ஆகிய இயக்கங்களும் பதியுதீன் மஹ்மூத் தலைமையில் சென்ற தூதுக்குழுவை சந்திக்கவில்லை.

தமிழர் விடுதலைக் கூட்டணி, புளொட், ஈரோஸ் ஆகிய அமைப்புக்களே தூதுக் குழுவை சந்தித்துப் பேசியிருந்தன.

# பாலசிங்கம் வீட்டுக்கு குண்டுவைப்பு



1985ல் ஆனந்த விகடன் வெளியிட்ட கருத்தோவியம்

## மீண்டும் முயற்சி

திம்பு பேச்சுக்கள் முறிவடைந்தபோதும் மீண்டும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்து வைக்க இந்திய பிரதமர் ராஜீவ் விருப்பம் கொண்டிருந்தார்.

ஈழப் போராளி அமைப்புக்களின் தலைவர்களை சந்தித்துப் பேசுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

ராஜீவ் காந்தியைச் சந்தித்து தமது நிலைப்பாட்டை விளக்க ஈழப் போராளி அமைப்புக்களது தலைவர்களும் விருப்பம் கொண்டிருந்தனர்.

"போர் நிறுத்தத்தை மீறிய அரசபடைகள் திருக்கோணமலையில் பொதுமக்களை வேட்டையாடிய காட்சிகளை வீடியோ படமாக வைத்திருக்கிறோம். அதனை ராஜீவ் காந்தியிடம் காண்பிப்போம்" என்று நான்கு இயக்க கூட்டமைப்பான ஈழத்தேசிய விடுதலை முன்னணி (E.N.L.F) கூறியது.

ஆனால் திம்பு பேச்சு முறியும் கட்டத்திலிருந்தபோது, போராளி அமைப்பின் தலைவர்களை ராஜீவ் காந்தியைச் சந்திக்க வைக்க ஒரு முயற்சி நடந்தது.

போராளி அமைப்பின் தலைவர்களைச் சந்திக்க ராஜீவ் காந்தி நேரமும் ஒதுக்கி வைத்திருந்தார்.

சென்னையில் இருந்து அவர்களை புதுடில்லிக்கு அழைத்துச் செல்ல விசேஷ விமானம் ஒன்றும் சென்னை விமான நிலையத்தில் மூன்று நாட்களாகக் காத்திருந்தது.

ஆனால், போராளி அமைப்புக்களது தலைவர்கள் தலைமறைவாகி விட்டனர். ராஜீவ் காந்தியைச் சந்தித்தால் திம்பு பேச்சைத் தொடரவேண்டிய நிலை ஏற்பட்டுவிடும் என்றே சந்திப்பை தவிர்த்துக் கொண்டார்கள்.

## கருணாநிதியின் முடிவு

திம்பு பேச்சுக்கள் முறிந்தது குறித்து திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் கருணாநிதியிடம் பி.ரி.ஐ. செய்தி நிறுவனம் கருத்துக் கேட்டது.

திரு.மு.கருணாநிதி சொன்னது இது: "1947ல் இந்திய உபகண்டம் இந்தியா, பாகிஸ்தான் என்று பிரிக்கப்பட்டதைப் போன்று, இலங்கையும் இன அடிப்படையில் பிரிக்கப்படுவதே ஒரேயொரு தீர்வாக அமையும்."

திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் சி.வீரமணி ஒரு அறிக்கையில் பின்வருமாறு சொன்னார்: "இலங்கைத் தமிழ் மக்களின் இன்னல் தீர தனிநாடு ஒன்றுதான் சரியான தீர்வாகும்.

அப்பாவித் தமிழ் மக்கள் மீது இலங்கை அரசு மீண்டும் இனப் படுகொலையை ஆரம்பித்துள்ளது. இப்படியான சூழ்நிலையில் பேச்சுவார்த்தைகளில் தொடர்ந்து கலந்து கொள்ளும்படி தமிழர் பிரதிநிதிகளை வற்புறுத்தக்கூடாது" என்று தெரிவித்தார் சி.வீரமணி. அதனை மத்திய அரசுக்கு தெரிவித்து ஒரு தந்தியும் அடித்திருந்தார்.

## சதி முயற்சி

தமிழ் நாட்டில் போராளி அமைப்புக்கள் சுதந்திரமாக நடமாடிக் கொண்டிருப்பதையும், தமிழகத்தில் ஏற்பட்டு வந்த ஆதரவும் இலங்கை அரசுக்கு கோபத்தை ஏற்படுத்திவிட்டது.

சென்னையில் போராளி அமைப்புக்களின் தலைவர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்த திட்டம் தயாரானது.

23.12.85 அன்று அதிகாலை 5 மணியளவில் சென்னையில் ஒரு குண்டு வெடிப்பு இடம் பெற்றது.

குண்டுவெடிப்புக்கு இலக்கான வீடு புலிகள் இயக்க ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தங்கியிருந்த வீடாகும்.

இலங்கை அரசின் கையாட்கள் செய்த சதி முயற்சி என்று விடுதலைப் புலிகள் இயக்கம் குற்றம் சாட்டியது.

குண்டை வைத்தவர் யார் என்றும் இனம் கண்டு விட்டதாக புலிகள் கூறினார்கள்.

அவர்கள் குற்றம் சாட்டியது யாரைத் தெரியுமா? கந்தசாமி நாயுடுவை. இலங்கைத் தொழிலாளர் காங்கிரசில் அமைச்சர் தொண்டமானுக்கு நெருக்கமாக தற்போதிருப்பவர்தான் கந்தசாமி நாயுடு.

புலிகள் ஏன் அவர் மீது குற்றம் சாட்டினார்கள்? அது அடுத்தவாரம்.

(தொடர்ந்து வரும்)

## ஜே.ஆர். அரசின் தீர்வுயோசனைகள்

திம்புப் பேச்சில் தமிழ் அமைப்புக்கள் முன்வைத்த நான்கு அம்ச அடிப்படைக் கோரிக்கைகளை கூறியிருந்தேன். அவற்றை நிராகரித்து இலங்கைத் தூதுக் குழுத் தலைவர் எச்.டபிள்யூ.ஜெயவர்த்தனா திம்புவில் தெரிவித்த யோசனைகள் இது:

1. தமிழர்கள் ஒரு தனித்துவமான தேசிய இனம் என்ற கோரிக்கை. இது இதர சமுதாயங்கள் அல்லது இனக் குழுக்களிலிருந்தும் நாட்டுக்கு தங்கள் விசுவாசக் கடப்பாட்டிலிருந்து வேறுபடும் வகையில் ஒரு தனித்துவம் அல்லது பிரிவினை என அர்த்தப்படுமானால் அது ஒரு புதிய நாட்டை உருவாக்குவதில் சம்பந்தப்படுவதாலும் நாம் அதனை நிராகரிக்கிறோம்.

× தமிழர்கள் ஒரு இனக் குழுவாகத் தொடர்ந்து நிலைப்பதற்கு அவசியமான உரிமைகளையும், நலன்களையும் பேணிப் பாதுகாப்பதற்கு உதவும் ஏதாவது யோசனைகளை பரிசீலிக்க நாம் தயாராகவிருக்கிறோம். நாட்டின் இறைமைக்கு குந்தகம் ஏற்படாதவாறு இலங்கையில் எல்லா சமுதாயங்களும் தங்கள் கலாசார பாரம்பரியம் மொழிப் பாரம்பரியங்கள் ஆகியவற்றை பேணிப் பாதுகாத்து ஊக்குவிக்கவும் தங்கள் மதத்தைக் கடைப்பிடிப்பதற்குமான உரிமையை நாம் அங்கீகரிக்கிறோம்.

× அரசியல் அமைப்பில் இந்த உரிமையை நாம் உறுதிப்படுத்துவதுடன். சிறுபான்மையோர் உரிமைகள் ஆணைக்குழு ஒன்றையும் நிறுவுவோம். அவசியமானால் அவர்கள் போதிய பிரதிநிதித்துவம் பெறுவதற்கான வகையில் ஒரு சபையையும் நிறுவுவோம்.

2. அடையாளம் காட்டப்பட்ட தமிழ்த் தாயகமும் அதன் பிரதேச ஒருமைப்பாட்டை உறுதிப்படுத்தலும்.

× இக்கோரிக்கை குடியரசின் சொந்தப் பிரதேச ஒருமைப்பாட்டிலிருந்து கிளை விடுவதான எண்ணம் தெளிவாக இருப்பதால் அத்தகைய எண்ணத்தை வரவேற்க முடியாது. தங்கள் தாயகமாக தமிழர்கள் குறிப்பிடும் பகுதிகளில் இதர சமுதாய மக்களின் குடியேற்றத்துக்கு எதிராக பூரண அல்லது பகுதியான கட்டுப்பாடு இருக்கும் என்ற வெளிப்பாட்டை இக்கொள்கை தொடர்வதால் அது இலங்கை குடிமக்கள் எல்லோரது அடிப்படை உரிமைகளையும் சுதந்திரங்களையும் மீறுதல் என்ற காரணத்தால் நாம் அதனை நிராகரிக்கிறோம்.

× தமிழ் இனத்தின் சுய நிர்ணய உரிமை என்ற மூன்றாவது கொள்கையானது இலங்கை குடியரசில் இருந்து பிரிந்து விடும் உரிமையையும் ஒரு தனி நாட்டையும் உருவாக்கும் உரிமையையும் வெளிப்படுத்துவதால் முற்றாக ஏற்க முடியாததாகும். அத்தன்மையில் அது நிராகரிக்கப்படுகிறது.

×இலங்கையில் உள்ள எல்லா சிறுபான்மையினரதும் உரிமைகள் அரசியலமைப்பில் ஏற்கனவே உறுதிப்படுத்தப் பட்டிருப்பினும் தற்போது தாங்கள் அனுபவித்து வரும் பங்கேற்பு அளவில் திருப்தியடையாத குழுக்கள் இருக்கலாம். உத்தேச அதிகாரப் பரவலாக்கல் திட்டம் இந்த கோரிக்கைகளை போதியளவு நிறைவாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

× உங்களுக்கென குறிப்பிட்ட பிரச்சனைகள் இருப்பின் நிவாரண நடவடிக்கைக்காக உங்கள் யோசனைகளை முன்வையுங்கள் என கேட்கிறேன்.

4. இலங்கையில் வாழும் எல்லா தமிழர்களுக்கும் பூரண குடியுரிமை என்ற இக்கொள்கைபற்றி ஏற்கனவே அரசாங்கம் இதுபற்றி முடிவு செய்துவிட்டதால் இதனை இங்கு விவாதிக்கத் தேவையில்லை.

இப்போது எமது பிரதான யோசனைகளை வெளிப்படுத்துவோம்.

இப்பேச்சுகளில் எட்டப்படும் ஏதாவது உடன்பாட்டை அமுலாக்குவதற்கு முன் நிபந்தனை ஒன்று தேவைப்படுகிறது.

× எல்லாவகையான தீவிரவாத நடவடிக்கையையும் முற்றாகத் துறத்தல்.

× இலங்கையிலுள்ள எல்லா தீவிரவாதக் குழுக்களும் தங்கள் ஆயுதங்களையும் சாதனங்களையும் ஒப்படைத்தல்.

× எல்லா பயிற்சி முகாம்களும் அவை இலங்கையிலாயினும்சரி வெளியிலாயினும்சரி மூடப்படவேண்டும்.

× அகதிகள் எங்கிருந்தாலும் சரி கலவரத்துக்கும் நிலை பெயர்வதற்கும் முன்னர் அவர்கள் வாழ்ந்த இடத்துக்கு எதுவித ஊறுமின்றித் திரும்ப அனுமதிக்கப்படல் வேண்டும்.

× சேதமாக்கப்பட்டோ சிதைக்கப்பட்டோ உள்ள கோயில்கள்,தேவாலயங்கள்,பள்ளி வாசல்கள் மற்றும் வணக்கத்தலங்கள் புனரமைக்கப்பட்டு எல்லா சமுதாய மத மக்களும் எங்கிருப்பினும் அரசியலமைப் பில் உறுதிப்படுத்தப்பட்டவாறு மதத்தை கடைப்பிடிக்க அனுமதிக்கப்பட வேண்டும்.

× இந்த முன் நிபந்தனைகள் கடைப்பிடிக்கப் படுகின்றன என அரசு திருப்திப்பட்ட பின்னரே தீவிரவாதக் குழுக்களின் கிளர்ச்சிகள் காரணமாக குற்றவியல் சட்டமீறல் எல்லாவற்றுக்கும் ஒரு பொது மன்னிப்பு வழங்கப்படும்.

× இங்கு எட்டப்படும் எந்த தீர்வும் அமுலாக்கப் படுவதற்கு எமது நாட்டில் அமைதியை ஏற்படுத்தவும் இது ஒன்று தான் அடிப்படை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்